**TAMIL NADU POLICE**
**INTEGRATED INVESTIGATION FORM-I**

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8108528

1. District மாவட்டம் : திருப்பூர்  PS: காவல்நிலையம்: ஊ.த.க.பிரிவு  Year ஆண்டு: 2021  FIR No. முதக எண்: 11/2021/AC/TPR  Date நாள்: 30.10.2021

2. (i) Act சட்டம்: The PC Act 1988 as  Sections பிரிவுகள்: 7,
(ii) Act சட்டம்: amended by The PC  Sections பிரிவுகள்: 12 r/w 7
(iii) Act சட்டம்: (Amendment) Act 2018  Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from நாள் முதல் : 29.10.2021  Date to நாள் வரை : —
Time Period நேர அளவு :  Time from நேரம் முதல் : 1830hrs  Time to நேரம் வரை : 2345hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30.10.2021  Time நேரம் : 1500hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol-II  Time நேரம் : 1500hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : சுமார் 10 கி.மீ. வடகிழக்கு
Beat Number : முறைக் காவல் எண் —
(b) Address : முகவரி தொட்டிபாளையம் சார்பதிவகம், ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக வளாகம் நெருப்பெரிச்சல், திருப்பூர் மாவட்டம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் —  District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டவர்/ தகவல் தந்தவர் பெயர் : இரா.முருகன்  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : இராஜன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு : 56yrs  (d) Nationality : நாட்டினம் : இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் : —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் —  Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் : துணை ஆட்சியர்/மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் கோவை, நீலகிரி, ஈரோடு மற்றும் திருப்பூர்  (g) Address : மாவட்ட ஆட்சியரகம், கோவை

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) S. வெங்கடேஸ்வரன் - 52 S/o சதாசிவம், சார்பதிவாளர், தொட்டிபாளையம் சார்பதிவகம், திருப்பூர் மாவட்டம்.
2) S. ஆதித்ய கண்ணன் - 35, S/o சண்முகம், கதவு எண். 3/413-B கார்த்திக் நகர் ஊத்துக்குளி ரோடு, பெரியபாளையம் அஞ்சல், மண்ணரை, திருப்பூர் [தனிநபர்]

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையிட்டவரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

சமர்ப்பிக்கப்படுகிறது

இத்துடன் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டவருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

30/10/21

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டவர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

30/10/2021
Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

30.10.2021, 1630hrs

Name: பெயர் பெ. ஆறுமுகம்
Rank: நிலை ......................No. எண் ..........
காவல் ஆய்வாளர்,
உ.த.க. பிரிவு, காஞ்சிபுரம்,
அயல்பணி உ.த.க. பிரிவு, ஈரோடு
...... உ.த.க.பிரிவு [illegible].

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 11/2021/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 30.10.2021-ம் தேதி காலை 15.00 மணிக்கு காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர், அயல்பணி ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு பொறுப்பு ஆய்வாளர் ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது இரா.முருகன், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கோயம்புத்தூர், நீலகிரி, ஈரோடு மற்றும் திருப்பூர், இருப்பு கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரகம் அவர்கள் அலுவலகம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட ஒரு புகாரினை கொடுத்தார். அதன் விபரம் வருமாறு. அனுப்புநர் திரு. இரா.முருகன், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கோயம்புத்தூர், நீலகிரி, ஈரோடு மற்றும் திருப்பூர். இருப்பு கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரகம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காஞ்சிபுரம், அயல்பணி ஈரோடு ஊ.த.க பிரிவு, பொறுப்பு காவல் ஆய்வாளர், திருப்பூர். அய்யா, பொருள்: திடீர் தணிக்கை-சார்பதிவாளர் அலுவலகம், தொட்டிபாளையம், ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக வளாகம், நெருப்பரிச்சல், திருப்பூர் மாவட்டம் - புகார்மனு வழங்குதல்- தொடர்பாக. பார்வை : கோவை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம் ந.க.எண் 1043/2021 நாள் 30.10.2021 திருப்பூர் மாவட்டம். நெருப்பெரிச்சலில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக வளாகத்திலுள்ள தொட்டிபாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராக பணிபுரியும் திரு.S.வெங்கடேஸ்வரன் என்பவர் பத்திரம் பதிவு செய்து கொடுக்க பத்திர எழுத்தர்கள் மற்றும் பத்திரம் பதிவு செய்ய வரும் பொதுமக்களிடம் அலுவல் முடிந்து செல்லும் சமயத்தில் அலுவலக வளாகத்தில் லஞ்சப்பணம் பெறுவதாக கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையில் நான், காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர், அயல்பணியாக ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு பொறுப்பு ஆய்வாளர் திரு.G.ஆறுமுகம் மற்றும் போலீஸ் பார்ட்டி ஆகியோருடன் மேற்படி அலுவலகத்தை 29.10.2021-ம் தேதி மாலை 18.00 மணி முதல்

கண்காணித்தும் சுமார் 19.45 மணிமுதல் இரவு 23.45 மணிவரை திடீர் தணிக்கை செய்தும் திரு.S.வெங்கடேஸ்வரன், சார்பதிவாளர், தொட்டிபாளையம் சார்பதிவகம், ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக வளாகம், நெருப்பெரிச்சல், திருப்பூர் மாவட்டம் அவர்களிடமிருந்து லஞ்சப்பணம் ரூ.1,14,270/-ஐ கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின்போது தயார் செய்யப்பட்ட நடவடிக்கைகள், ஆதித்ய கண்ணன் அவர்களின் வாக்குமூலம், கைப்பற்றப்பட்ட லஞ்சப்பணம் ரூ.1,14,270/-ஐ மேற்படி தொட்டிபாளையம், சார்பதிவக வருகைப் பதிவேடு நகல் மற்றும் தனி நபர் பணம் தனி உறையில் வைக்கும் பதிவேடு நகல் ஆகியவைகளை தங்களிடம் ஆஜர் செய்கிறேன். இது குறித்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் கோயம்புத்தூர், நீலகிரி, ஈரோடு மற்றும் திருப்பூர். ஒப்பம் XXXXX இரா.முருகன், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கோயம்புத்தூர், நீலகிரி, ஈரோடு மற்றும் திருப்பூர், இருப்பு கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரகம் Sir, received the above Tamil typed complaint with enclosures on 30.10.2021 at 15.00 hrs and registered a case in Tiruppur V&AC Cr.No.11/2021/AC/TPR U/s 7 and 12 r/w 7 of Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 ஒப்பம் xxxx G.ஆறுமுகம் 30/10/2021 Inspector of Police, V&AC, Kanchipuram, OD at Erode, I/c Inspector of Police, V&AC Tiruppur. திடீர் சோதனை நடவடிக்கைகள் விவரம் பின்வருமாறு முன்னிலை 1. இரா.முருகன், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கோயம்புத்தூர், நீலகிரி, ஈரோடு மற்றும் திருப்பூர், இருப்பு கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரகம் 2. திரு.G.ஆறுமுகம், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காஞ்சிபுரம், அயல்பணி ஊ.த.க பிரிவு ஈரோடு, பொறுப்பு ஆய்வாளர் ஊ.த.க பிரிவு திருப்பூர். 3) திரு.S.வெங்கடேஸ்வரன், சார்பதிவாளர், தொட்டிபாளையம் சார்பதிவகம், ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக வளாகம், நெருப்பெரிச்சல், திருப்பூர் மாவட்டம். இன்று 29.10.2021-ம் தேதி மாலை 19.30 மணிக்கு திருப்பூர் மாவட்டம் நெருப்பெரிச்சலில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக வளாகத்திலுள்ள தொட்டிபாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராக பணிபுரியும் திரு.S.வெங்கடேஸ்வரன் என்பவர் பத்திரம் பதிவு செய்து கொடுக்க பத்திர எழுத்தர்கள் மற்றும் பத்திரம் பதிவு செய்ய

வரும் பொதுமக்களிடம் அலுவல் முடிந்து செல்லும் சமயத்தில் அலுவலக வளாகத்தில் லஞ்சப்பணம் பெறுவதாக கிடைத்த தகவலின் பேரில் ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக வளாகம் அருகே நின்று கண்காணித்துக் கொண்டிருந்த போது மாலை சுமார் 18.30 மணிக்கு மேற்படி சார்பதிவாளர் வெங்கடேஸ்வரன் முதல் தளத்தில் இருந்த தனது அலுவலகத்தை விட்டு கீழே வந்து அந்த வளாகத்தில் நின்ற போது அங்கு வந்த TN 39 BD 7077 என்ற பதிவு எண் கொண்ட ஒரு மெரூன் கலர் FIAT Punto காரில் ஏறி முன் சீட்டில் அமர்ந்தார். அந்த காரின் ஓட்டுனர் இருக்கையில் ஒரு ஆணும், பின் பக்க இருக்கையில் ஒரு பெண்ணும் ஏற்கனவே அமர்ந்திருந்தனர். அவர் ஏறி அமர்ந்ததும் அந்த கார் அங்கு நின்று கொண்டிருந்தது. அப்போது இரு சக்கர வாகனத்தில் வந்த ஒரு வாலிபர் அந்த காரை நோக்கி வந்தவுடன் ஏற்கனவே அந்த வளாகத்தில் காத்திருந்த ஒரு ஆண் நபர் இரு சக்கர வாகனத்தில் வந்த மேற்படி நபரிடமிருந்து ஒரு வெள்ளை நிற கவரை பெற்று முன்புற இருக்கையில் அமர்ந்திருந்த மேற்படி சார்பதிவாளரிடம் அந்த வெள்ளை நிற கவரை கொடுத்தார். அதன் பின்னர் அந்த கார் புறப்பட்டதும் விரைந்து சென்று இரு சக்கர வாகனத்தில் வந்த வாலிபர் மற்றும் வெள்ளை நிற கவர் கொடுத்த மற்றொரு நபரிடமும் அறிமுகம் செய்து கொண்டு மேற்படி சார்பதிவாளரிடம் கவர் கொடுத்தது சம்பந்தமாக விசாரிக்க கவர் கொடுத்த நபர் தனது பெயர் ஆதித்யகண்ணன் வயது 35 என்றும், தனது அப்பா பெயர் சண்முகம், கதவு எண்.3/413-B, கார்த்திக் நகர், ஊத்துக்குளி ரோடு, பெரியபாளையம் அஞ்சல், மண்ணரை, திருப்பூர் என்ற விலாசத்தில் குடியிருந்து கொண்டு ஸ்ரீஅம்மன் டைப் ஆபீஸ் என்ற பெயரில் அலுவலகம், ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக வளாகத்திற்கு எதிரில் அமைந்துள்ள வாரி காம்பளக்சில் வைத்துள்ளதாகவும் தொட்டிபாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் தான் பதிவு செய்யும் ஆவணங்களுக்காக சார்பதிவாளர் வெங்கடேஸ்வரன் அவ்வப்பொழுது லஞ்சமாக கொடுக்கும் பணம் இன்று மாலை சுமார் 18.30 மணிக்கு சார்பதிவாளர் கேட்டுக் கொண்டதன் பேரில் எனது அலுவலகத்தில் பணிபுரியும் பரத் என்ற நபரை எனது அலுவலகத்திலிருந்து கொண்டு வந்து வெள்ளை கவரில் கொடுத்த ரூ.50,000/-த்தை அந்த கவருடன் சார்பதிவாளர் வெங்கடேஸ்வரனிடம் கொடுத்ததாகவும் கூறினார். இரு சக்கர வாகனத்தில் வந்து

ஆதித்யகண்ணன் அருகில் இருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் பரத் வயது 21 என்றும், தனது அப்பா பெயர் சுகுமாறன், கதவு எண்.1, முத்து நகர் எக்ஸ்டன்சன், 3-வது தெரு, திருப்பூர் என்றும் மேற்படி ஸ்ரீஅம்மன் டைப் ஆபிசில் ஆதித்யகண்ணன் அவர்களுக்கு கடந்த 11 மாதமாக உதவியாக இருந்து வருவதாக கூறியவரிடம் அவர் கொண்டு வந்த பணம் பற்றி விசாரிக்க அவர் தான் மேற்படி ஆதித்யகண்ணன் தன்னிடம் ஸ்ரீ அம்மன் டைப் ஆபிஸில் பணம் ரூ.50,000/-த்தை ஒரு வெள்ளை கவரில் வைத்துள்ளதாகவும் அதை எடுத்து வந்து தன்னிடம் கொடுக்கும்படி கூறியதன் பேரில் அவரும் இரு சக்கர வாகனத்தில் சென்று மேற்படி பணத்தை எடுத்து வந்து ஆதித்யகண்ணனிடம் கொடுத்த போது அதை அவர் பெற்று சார்பதிவாளர் வெங்கடேஸ்வரனிடம் கொடுத்ததாகவும் அப்போது அவர் உடனிருந்ததாகவும் கூறினார். அதனடிப்படையில் நான் வைத்திருந்த அரசு வாகனத்தில் உடனே புறப்பட்டு சற்று தூரத்தில் சார்பதிவாளர் சென்று கொண்டிருந்த வாகனத்தை நிறுத்தி அவரிடம் திடீர் தணிக்கை குழுவினர் தங்களை அறிமுகம் செய்து கொண்டு அவரை விசாரித்த போது அவர் மேற்படி காரை விட்டு வெளியே வந்து தான் ஸ்ரீஅம்மன் டைப் ஆபிஸை சார்ந்தஆதித்யகண்ணன் அவர்களிடம் ஏற்கனவே பத்திரம் பதிவு செய்ததற்கு லஞ்சமாக பணம் ரூ.50,000/-த்தை வெள்ளை கவரில் பெற்றுக்கொண்டதாக ஒப்புக் கொண்டார். அந்த காரில் அவர் அருகில் அமர்ந்திருந்த நபர்களை பற்றி விசாரிக்க அவர் பெயர் S.ரத்தினசாமி வயது 61, த/பெ.செல்லப்பகவுண்டர் என்றும் மற்றும் அவரது மனைவி R.கந்தராம்பாள், வயது 52, க/பெ.ரத்தினசாமி என்றும் தாங்கள் கதவு எண்.3/774, சத்யா காலனி 4-வது வீதி, மண்ணரை, திருப்பூர் என்ற முகவரியில் வசித்து வருவதாகவும் கூறினார்கள். மேற்படி இடம் பொது இடம் என்பதால் இடைஞ்சலை தவிர்க்கும் பொருட்டு அங்கிருந்து புறப்பட்டு அவரது அலுவலகமான தொட்டிபாளையம் சார்பதிவாளர் அலுவலகத்துக்கு அழைத்து வரப்பட்டது. அந்த தொட்டிபாளையம் சார்பதிவாளர் அலுவலகமானது ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக வளாகத்திலுள்ள வடக்கு பார்த்த கட்டிடத்தில் முதல் தளத்தில் மேற்கு பார்த்து அமைந்துள்ளது. இந்த அலுவலகத்திற்கு எதிரே கிழக்கு பார்த்தவாறு மாவட்ட பதிவாளர் நிர்வாகம் & தணிக்கை அலுவலகம் அமைந்துள்ளது. அந்த அலுவலகத்தில் வடபுறம் கணினி அறையும் ஒரு கழிவறையும் உள்ளது. கிழபுறம் இளநிலை உதவியாளர், உதவியாளர் அமரும் இருக்கையும்

அத்துடன் கணினியும், தென்புறம் பதிவுகள் வைப்பறையும், உதவியாளர் அமரும் இருக்கையும் போடப்பட்டிருந்தது. இந்த அலுவலகத்தின் தென் மேற்கு மூலையில் சார்பதிவாளரது இருக்கை மற்றும் கணினி போடப்பட்டிருந்தது. இந்த அறையின் மேற்புறம் பத்திரம் பதிவு செய்ய வரும் நபர்கள் ரேகை வைக்கும் டேபிளும் போடப்பட்டிருந்தது. சார்பதிவாளர் வெங்கடேஸ்வரன் அவர்களை விசாரித்த போது தனது பெயர் வெங்கடேஸ்வரன் என்றும், அப்பா பெயர் லேட்.சதாசிவம் என்றும், தான் B.Sc., வரை படித்துள்ளதாகவும், சொந்த ஊர் புஞ்சை புளியம்பட்டி என்றும், கதவு எண்.27, ஆஷாத் வீதி, புஞ்சை புளியம்பட்டி, ஈரோடு மாவட்டத்தில் வசித்து வருவதாகவும், கோபிசெட்டிபாளையம் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் 1 எண்.இணை சார்பதிவாளராக பணிபுரிந்து வந்ததாகவும் கடந்த 19.07.2021 முதல் திருப்பூர் மாவட்டம் தொட்டிபாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராக பணிபுரிந்து வருவதாகவும் கூறினார். அவரிடம் உள்ள பணம் பற்றி விசாரிக்க அவர் தானாக முன் வந்து தான் அணிந்திருந்த நீல நிற ஜீன்ஸ் பேண்டில் இடது புற பாக்கெட்டில் இருந்து 500 ரூபாய் நோட்டுக்களாக ரூ.18,000/- மற்றும் ரூ.11,000/-த்தை இரண்டு கத்தையாக எடுத்து ஆஜர் செய்தார். பேண்டின் பின்புற பாக்கெட்டில் இருந்து பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை எண்ணி பார்க்க ரூ.13,350/- இருந்தது. அதை தொடர்ந்து அவர் மதிய உணவு கொண்டு வந்த சிவப்பு நிற ஷோல்டர் பேக்கினை அவரே திறந்து அதிலிருந்த வெள்ளை மற்றும் பிரவுன் கவரை எடுத்து ஆஜர் செய்தார். அந்த வெள்ளை கவரை திறந்து அதில் இருந்த பணத்தை எண்ணிப் பார்க்க அதில் 500 ரூபாய் நோட்டுக்கள் ரூ.50,000/- இருந்தது. பிரவுன் கவரை திறந்து எண்ணிப் பார்க்க 500 ரூபாய் நோட்டுக்களாக ரூ.20,000/- இருந்தது. மேற்படி பணம் பற்றி சார்பதிவாளர் வெங்கடேஸ்வரன் அவர்களிடம் விசாரித்த போது பத்திர பதிவு செய்ய வரும் பொதுமக்கள், ஆவண எழுத்தர்களிடம் பத்திர பதிவு செய்ய லஞ்சமாக மேற்படி பணம் ரூ.1,12,350/- ஐ கேட்டுப் பெற்ற பணம் என்றும் தெரிவித்தார். மேலும் பணம் பற்றி கேட்க வெங்கடேஸ்வரன் அவர்கள் அணிந்திருந்த பச்சை நிற முழுக்கை சட்டையின் இடது பக்க மேல்பாக்கெட்டில் இருந்து தனது சொந்த பணம் என்று ரூ.3,020/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அப்போது தனி நபர் பணம் தனி உறையில் வைக்கும் பதிவேடு பற்றி கேட்ட போது தொகுதி எண்.13 சார்பதிவாளர் அலுவலகம் தொட்டிபாளையம் என்று குறிப்பிடப்பட்ட

மேற்படி பதிவேட்டை எடுத்து ஆஜர் செய்தார். அதில் 36-ம் பக்கத்தில் 29.10.2021-ம் தேதியில் பார்வையிட்டதில் சார்பதிவாளர் வெங்கடேஸ்வரன் தொகை ரூ.1,100/- கொண்டு வந்த விபரத்தை குறிப்பிட்டிருந்தார். அந்த பணம் ரூ.1,100/- மட்டுமே குறிப்பிடப்பட்டிருந்த விபரத்தை காண்பித்து கேட்ட போது அவர் உண்மையை ஒப்புக் கொண்டு தான் ரூ.3,020/- கொண்டு வரவில்லை என்றும் உண்மையில் ரூ.1,100/- மட்டுமே கொண்டு வந்ததாகவும் மீதி பணம் ரூ.1,920/-ஐ இன்று ஆவண பதிவுக்காக வந்த பொது மக்களிடம் தனக்கு தனியாக பெற்றுக் கொண்ட ஒரு பகுதி பணம் என்று தெரிவித்தார். அதன் பேரில் ரூ.1,100/- மட்டுமே திருப்பி கொடுக்கப்பட்டு ரூ.1,920/-ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. எனவே மேற்படி பணம் லஞ்ச பணம் என்பதால் ரூ.1,14,270/-ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் இந்த அலுவலகத்திலுள்ள வருகைப் பதிவேடு பற்றி சார்பதிவாளர் வெங்கடேஸ்வரன் அவர்களிடம் கேட்ட போது சார்பதிவகம் தொட்டிபாளையம் என்று குறிப்பிடப்பட்டிருந்த வருகை பதிவேட்டினை எடுத்து ஆஜர் செய்தார். அதில் 29.10.2021-ம் தேதிக்கு சுருக்கொப்பம் செய்திருந்தார். எனவே மேற்படி வருகைப் பதிவேடு மற்றும் தனி நபர் பணம் தனி உறையில் வைக்கும் பதிவேடு ஆகியவற்றை நகல் எடுக்கப்பட்டு அதில் உண்மை நகல் என்று சார்பதிவாளர் வெங்கடேஸ்வரன் அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி இரு அசல் ஆவணங்களையும் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. இந்த திடீர் தணிக்கையானது 29.10.2021 ஆம் தேதி சுமார் 19.45 மணிக்கு துவங்கி 23.45 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த திடீர் தணிக்கை நடவடிக்கையானது நெருப்பெரிச்சலில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக வளாகத்திலுள்ள தொட்டிபாளையம் சார்பதிவாளர் அலுவலக அறையில் வைத்து மடிக்கணினியில் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.தர்மராஜ் என்பவரால் அலுவலகத்திருந்து கொண்டு வந்திருந்த மடிக்கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின்போது அரசு அலுவலர்களும் மற்ற நபர்களும் கண்ணியத்துடன் நடத்தப்பட்டனர். கோவிட் 19 பாதுகாப்பு சம்பந்தமாக அரசு வழிகாட்டுதல்களை பின்பற்றப்பட்டது. இந்த திடீர் தணிக்கை நடவடிக்கை கீழ்கண்ட நபர்களால் கையெழுத்து செய்யப்பட்டது. ஒப்பம் xxxx இரா.முருகன், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்,

கோயம்புத்தூர், நீலகிரி, ஈரோடு மற்றும் திருப்பூர், இருப்பு கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரகம், ஒப்பம் xxxx திரு.G.ஆறுமுகம், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காஞ்சிபுரம், அயல்பணி ஊ.த.க பிரிவு ஈரோடு, (பொறுப்பு) காவல் ஆய்வாளர் ஊ.த.க பிரிவு திருப்பூர், ஒப்பம் xxxx திரு.S.வெங்கடேஸ்வரன், S/o சதாசிவம், சார்பதிவாளர், தொட்டிபாளையம் சார்பதிவகம், ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக வளாகம், நெருப்பெரிச்சல், திருப்பூர் மாவட்டம், ஒப்பம் xxxx ஆதித்யகண்ணன், த/பெ சண்முகம், கதவு எண். 3/413-B, கார்த்திக் நகர், ஊத்துக்குளிரோடு, பெரியபாளையம், அஞ்சல், மண்ணரை, திருப்பூர், ஒப்பம் xxxx பரத், த/பெ. சுகுமாறன், கதவு எண்.1, முத்து நகர் எக்ஸ்டன்சன், 3 வது தெரு, திருப்பூர். நான் மேற்கண்ட புகாரினையும் செயல் முறை நடவடிக்கைகளையும் மேற்கண்ட நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,14,270/- ம் இன்று 30.10.2021-ம் தேதி 15.00 மணிக்கு பெற்று திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் நிலைய குற்ற எண்.11/2021/AC/TPR U/s 7 and 12 r/w 7 of Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 கீழ் 15.00 மணிமுதல் 16.00 மணி வரை 1) திரு.S.வெங்கடேஸ்வரன், S/o சதாசிவம், சார்பதிவாளர், தொட்டிபாளையம் சார்பதிவகம், ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக வளாகம், நெருப்பெரிச்சல், திருப்பூர் மாவட்டம் 2) ஆதித்யகண்ணன், த/பெ சண்முகம், கதவு எண். 3/413-B, கார்த்திக் நகர், ஊத்துக்குளிரோடு, பெரியபாளையம், அஞ்சல், மண்ணரை, திருப்பூர் (தனிநபர்) ஆகியோர்களின் மீது வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார், திடீர் சோதனை நடவடிக்கைகள், தனிநபர் ஆதித்யகண்ணன் அவர்களின் வாக்குமூலம், பணம் ரூ.1,14,270/- ஆகியவற்றை கனம் தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருப்பூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் முதல் தகவல் அறிக்கையின் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

30/10/2021

(G.Arumugam),
I/c Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruppur.